# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | நோக்கு | 02 |
| 3. | இலட்சியப் பணி | 03 |
| 4. | தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை | 04 |
| 5. | பிரதான அலுவலர் குழாம் | 06 |
| 6. | நிறுவனக் கட்டமைப்பு | 07 |
| 7. | தவிசாளரின் மீளாய்வு | 08 |
| 8. | நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 |
| 9. | நிதி அறிக்கை | 18 |
| 9.1 | ஐந்தொகை | 18 |
| 9.2 | வரவு செலவுக் கணக்கு | 19 |
| 9.3 | பரீட்சை மீதி | 20 |
| 10. | கணக்காய்வு அறிக்கை | 22 |

# 01. அறிமுகம்

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

2008ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது.

நகரக் குடியிருப்புகளின் அபிவிருத்திக்கு ஏற்புடைய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல், நிலைபேறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியின் பொருட்டு குறைந்த வசதிகள் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை தரமுயர்த்தல் மற்றும் அந்த மக்களுக்கு குறைந்த பட்ச நகரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தற்போதுள்ள வீட்டுக் கூறுகளை தரமுயர்த்தல் அல்லது மிகச் சிறந்த குடியிருப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தல் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் அடிப்படைக் குறிக்கோள்

# 02. நோக்கு

" நிலைபேறான நகரக் குடியிருப்புகளில் மேம்பட்ட வாழ்க்கை முறையை உறுதிப்படுத்தல்....... "





# 03. இலட்சியப் பணி

" நிறைவான நகர அபிவிருத்தி திட்டமிடலுக்கமைய குறைந்த

வசதிகள் கொண்ட நகரக்

குடியிருப்புகள் மற்றும் நகர்சார்ந்த மக்களின் குடியிருப்பு

பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்கல் அத்துடன் அதற்கு

இணையாக அவர்களை சமூக,

பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுதல்"

## தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

### 2011.01.01 திகதி தொடக்கம் 2011.12.31 திகதி வரை பணிப்பாளர் சபை

| | பதவி | பெயர் | நியமன திகதி |
|---|---|---|---|
| 01 | தவிசாளர் | சட்டத்தரணி திரு. பாலித கமகே | 2010.05.24 |
| 02 | பணிப்பாளர் தலைமையதிபதி (பணிப்பாளர் சபை செயலாளர்) | வைத்தியர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 03 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | வண. இத்தேகந்தே சந்தாதிஸ்ஸ தேரர் | 2010.05.24 |
| 04 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | வைத்தியர் திரு. நிஹால் ஜயதிலக | 2010.06.15 |
| 05 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஜனக குருகுலசூரிய | 2010.06.15 |
| 06 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ. டப்ளியு. தயானந்த | 2010.07.07 |
| 07 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | செல்வி. எம். ஐ. வீ. அமரசேகர | 2010.07.28 |
| 08 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. பர்னாட் காரியவசம் | 2010.05.24 |
| 09 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ரனில் பிரியந்த பெர்னாந்து | 2010.05.24 |
| 10 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ. எச். சுரேஷ் இந்திக | 2010.05.24 |
| 11 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. சமிந்த குமார சுதசிங்ஹ | 2010.05.24 |
| 12 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. அஜித் கித்சிறி பண்டார | 2010.05.24 |

## தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபை

### 2011.01.01 தொடக்கம் 2011.12.31 திகதி வரையான பிரதான அலுவலர் குழாம்


| | பதவி | பெயர் | நியமன திகதி |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் தலைமையதிபதி | வைத்தியர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 02 | பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம், அபிவிருத்தி) | திரு. வை. ஆர். த சில்வா | 2009.08.01 |
| 03 | பணிப்பாளர் பதில் கடமை (நிதி) | திரு. என். ஜீ. பீ. டயஸ் | 2011.02.01 |
| 04 | சிரேஷ்ட முகாமையாளர் (மு.த.மு) | திரு. எம். டி. கே. சந்திரசேன | 2011.01.20 |
| 05 | அகக் கணக்காய்வாளர் (பதில் கடமை) | திரு. எல். ஆர். ஏ. சாந்த | 2011.02.01 |
| 06 | சிரேஷ்ட பொறியியலாளர் | திரு. ஜீ. ஜே. குணசேகர | 2009.10.01 |
| 07 | சட்ட உத்தியோகத்தர் | திருமதி. டி.ஏ.தேவிகா திஸாநாயக | 2009.11.01 |
| 08 | சிரேஷ்ட கருத்திட்ட உத்தியோகத்தர் | செல்வி. பீ. எஸ். கமகே | 2009.01.26 |
| 09 | சிரேஷ் முகாமையாளர் நிருவாகம் (பதில் கடமை) | திருமதி. கே. கே. டபிள்யு. ரி. பி. த சில்வா | 2011.01.18 |

## பிரதான அலுவலர் குழாம்

### 2011.11.01 தொடக்கம் 2011.12.31 திகதி வரையான பிரதான அலுவலர் குழாம்

| | பதவி | பெயர் | நியமன திகதி |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் தலைமையதிபதி | வைத்தியர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 02 | பணிப்பாளர் (சமூக உயிர்ப்பூட்டல்) | திரு. வை. ஆர். த சில்வா | 2011.11.01 |
| 03 | பதில் கடமை பணிப்பாளர் (நிதி) | திரு. என். ஜீ. பீ. டயஸ் | 2011.02.01 |
| 04 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் மு.த.மு | திரு. எம். டி. கே. சந்திரசேன | 2011.11.01 |
| 05 | அகக் கணக்காய்வாளர் பதில் கடமை | திரு. எல். ஆர். ஏ. சாந்த | 2011.02.01 |
| 06 | சிரேஷ்ட பொறியியலாளர் | திரு. ஜீ. ஜே. குணசேகர | 2011.11.01 |
| 07 | உதவிப் பணிப்பாளர் (நிதி) | திருமதி. டீ.ஏ.தேவிகா திஸாநாயக | 2011.11.01 |
| 08 | உதவிப் பணிப்பாளர் (சமூக உயிர்ப்பூட்டல்) | செல்வி. பீ. எஸ். கமகே | 2011.11.01 |
| 09 | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி) | திருமதி. கே. கே. டபிள்யு. ரி. பி. த சில்வா | 2011.11.01 |

# நிறுவனக் கட்டமைப்பு



## தவிசாளரின் மீளாய்வு

2011ஆம் ஆண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மூன்றாவது செயற்பாட்டு வருடமாகும். இந்த ஆண்டில் பிரதானமாக அதிகாரசபையின் பணியாட்தொகுதி பலப்படுத்தப்பட்டது. 2010.12.30ஆம் திகதி அதிகாரசபைக்கென முதன் முறையாக ஒரு பணியாட்தொகுதி அங்கீகரிக்கப்பட்டதோடு, அதற்கமைய அதிகாரசபையின் குறிக்கோள்களை அடைவதற்காக சமூக உயிர்ப்பூட்டல், திட்டமிடலும் முகாமைத்துவ தகவல் முறைமையும், பொறியியல், சட்டம், காணி, நிருவாகம், நிதி மற்றும் கணக்காய்வு என பிரிவுகள் ஆக்கப்பட்டு அவற்றுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு ஒழுங்கு முறையான நிகழ்ச்சித்திட்டங்களை இந்த ஆண்டில் ஆரம்பிக்க முடிந்தது.

இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு ஏற்பான விதத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்க முடிந்ததுடன், அதன் கீழ் ஜன செவண சஹஸ்ரலஹ்கா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமும், “ஜன செவண சுய சக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன.

ஜன செவண சஹஸ்ரலங்கா நகர வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 60 வீட்டுக் கூறுகளைக் கொண்ட பொரளை, சிங்ஹபுர வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ஆரம்பிக்க முடிந்ததுடன், கொழும்பு 07, ரொறிங்ரன் மாவத்தை, 187ஆம் தோட்டத்தில் 46 சேரி வீடுகளில் வசித்த 46 குடும்பங்கள் உட்பட்ட 60 குடும்பங்களுக்கு வசதிகளுடன் கூடிய வீடுகள் அமைக்கப்பட்டன.

மொறட்டுவ நகர வலயத்தில் கடலரிப்பின் காரணமாக இடம்பெயரும் குடும்பங்களுக்காக 288 வீட்டுக் கூறுகளைக் கொண்ட அடுக்குமாடி வீட்டுத்திட்டத்தை இந்த ஆண்டில் ஆரம்பிக்க முடிந்தது.

குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள நகரக் குடியிருப்பு வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் “ஜன செவண சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, கொழும்பு நகர வலயத்தின் கொழும்பு வடக்கு, மத்திய கொழும்பு, கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு மற்றும் பொரளை ஆகிய 04 வலயங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிந்தது. இதன் கீழ் சமூக அடிப்படை அமைப்புகளை வலுவூட்டல், மக்களை சிறு குழுக்களாக பலப்படுத்தல், சேமிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், போதைப் பொருள் தடுப்பு, வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, குறுங் கடன் நிதி நிகழ்ச்சித்திட்டம், நகர கமத்தொழில் கருத்திட்டம் மற்றும் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

2011 உலக குடியிருப்பு தினத்தை முதன்மைப்படுத்தி கொழும்பு நகரில் நகரக் குடியிருப்புகளைச் சார்ந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இவற்றில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 2500 சிறுவர்கள் செயலூக்கத்துடன் பங்கேற்றிருந்தனர். ஜன செவண பெண்கள் மற்றும் இளைஞர்கள் “ஜன செவண சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் முழு அளவில் இணைந்து செயலாற்றினர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தால் மக்களின் மனப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அமுலிலுள்ள அபிவிருத்த நடவடிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கும் முடிந்தது.

அனுராதபுரம் நகர வலயத்தில் வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு 108 வீட்டுக் கூறுகளைக் கொண்ட “துருஇத்துறுகம” வீடமைப்புத் திட்டம் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அதில் 30 சதவீதமான வேலைகளை நிறைவு செய்ய முடிந்தது.

தொகுத்து நோக்கும்போது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கென பணியாட்தொகுதி அமைக்கப்பட்டதும், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை அடிப்டையாகக் கொண்ட பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை இந்த ஆண்டில் ஆரம்பிக்கும் வாய்ப்பு கிடைத்தமையும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.


சட்டத்தரணி பாலித கமகே

தவிசாளர்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

## நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

2011ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை கீழ்க் காணப்படும் 03 அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

1. “ஜன செவண சஹஸ்ரலங்கா” நகர வீட்டுத் திட்டம்
2. “ஜன செவண சுய சக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
3. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### 1. “ஜன செவண சஹஸ்ரலங்கா” நகர வீட்டுத் திட்டம்

மஹிந்த சிந்தனை தொலை நோக்கில் உள்ளவாறு வீடுளை இழந்துள்ள அனைவருக்கும் அடுத்து வரும் ஆறு ஆண்டு காலப்பகுதியில் வீடு ஒன்றின் உரிமையைக் பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கத்தின் முழு அளவிலான இடையீட்டுடன் ஜன செவண தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி தொழிற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கொழும்பு உட்பட்ட நாட்டின் நகரப் பிரதேசங்களில் குறைந்த வசதிகளுடன் காணப்படும் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களை ஒழுங்கு முறையிலமைந்த அடுக்குமாடி வீடுகளில் குடியமர்த்துவதற்காக பங்கீட்டு அணுகுமுறையில் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த அணுகுமுறையின் ஊடாக குறைந்த வசதிகளை கொண்டுள்ள குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடுகளின் உரிமை வழங்கப்படுவதுடன், நகரில் காணப்படும் பெறுமதி வாய்ந்த காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படுகிறது.

### 1.1 பொரளை சிங்ஹபுர (48ஆம் தோட்டம்)வீட்டுத் திட்டம் - கட்டம் இரண்டு



ஜன செவண சஹஸ்ரலங்கா வீடமைப்பு திட்டத்தன் கீழ் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 60 வீட்டுக்கூறுகளைக் கொண்ட பொரளை சிங்ஹபுர அடுக்குமாடி வீட்டுத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் மூன்று தொகுதி களையும், ஐந்து மாடிகளையும் கொண்டுள்ளது.

2011ஆம் ஆண்டு பொதுத் திறைசேரியினால் 175.86 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நிர்மாணப் பணிகள் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டதோடு, கருத்திட்டத்தின் முகாமைத்துவப் பணிகளை கட்டடத் திணைக்களம் மேற்கொண்டது. 11-0674-517-016ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இக்கருத்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி அதிகாரசபையினால் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் உடன்பாட்டுடன் ஒப்பந்தமாகியிருந்த கொழும்பு 07, ரொறிங்ரன் மாவத்தை 187ஆம் தோட்டத்தில் வசித்த 46 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டன.

## மொறட்டுவ நகர, சுற்றாடல் மற்றும் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மஹிந்த சிந்தனை தொலை நோக்கில் உள்ளவாறு அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் மீனவ சமூகத்தினரின் வீட்டுப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக அரசாங்கம் இடையீடு செய்ய வேண்டியதன் தேவைப்பாட்டுக்கு அமைய கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் கடலரிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கென இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கரையோர வலய முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ற வகையில் கண்டறியப்பட்ட பிரதேசங்களில் வனப்பையும் நிலைபேறையும் ஏற்படுத்துவதற்காக இத்திட்டத்தின் மூலம் கரையோரப் பூங்காக்களை அமைக்க யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் விடுவிக்கப்படும் கடற்கரையை வணிக ரீதியிலான கரையோர பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களமும் இணைந்து திட்டவமைப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

## 1.2 மொறட்டுவ அங்குலான அடுக்குமாடி வீட்டுத் திட்டம் (கட்டம் 1)



மொறட்டுவ மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் இன்றளவில் அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள அங்குலான 0.6411 ஹெக்ரயர் காணியில் 09 மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ள அடுக்குமாடி வீட்டுத்திட்டத்தின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் 144 வீட்டுக் கூறுகளின் நிர்மாணப் பணிகளுடன் ஆரம்பமானது. இதற்கான நிதியாக பொதுத் திறைசேரி 2011ஆம் ஆண்டு 400.22 மில்லியன் ரூபா தொகையை அங்கீகரித்தது.

இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 11-1067-517-021 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மொறட்டுவ கரையோரப் பிரதேசங்களில் சுற்றாடல் ரீதியான பாதிப்புகளுக்கு இலக்காகும், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உத்தேச கரையோர பாதுகாப்புச் சுவர் அமைக்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக வெளியேற்றப்படவிருக்கும் குடும்பங்கள் இக்கருத்திட்டத்தின் முதல் கட்ட பயனாளிகளாவர்.



இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டதோடு, கருத்திட்டத்தின் முகாமைத்துவப் பணிகளை கட்டடத் திணைக்களம் மேற்கொள்கிறது. இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2011ஆம் ஆண்டு யூன் மாதம் 02ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

## 2.“ஜன செவண சுய சகதி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு நகரிலும், ஏனைய நகரக் குடியிருப்பு பிரதேசங்களிலும் வீடமைப்பு அபிவிருத்தி உட்பட்ட பல்வேறு குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதோடு, அதனோடு இணைந்ததாக குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறையை விருத்தி செய்வதற்காக சமூக மட்ட அமைப்புகளை வலுவூட்டி அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் ஜன செவண சுயசக்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அதன்படி இந்த நிகழ்ச்சித்திட்டம் 2011ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கொழும்பு நகரில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு நகர வலயங்களை 04 பிரிவுகளாக வேறுபடுத்தி சுயசக்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பமாகின.

அதன் பிரகாரம்,

1. கொழும்பு வடக்கு வலயம்
2. மத்திய கொழும்பு வலயம்
3. கொழும்பு கிழக்கு ∴ மேற்கு வலயம்
4. பொரளை வலயம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதன்படி சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

2.1 வசதி குறைந்த நகரக் குடியிருப்புகளில் பௌதீக அபிவிருத்திக்கு இணையாக மனித அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

2.2 வசதி குறைந்த குடியிருப்புகளில் வாழும் மக்களில் தங்கி வாழும் மனநிலை இல்லாத சுயசக்தியில் முன்னேறும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தல்.

2.3 2008ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான நோக்கமான பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையைக் கடைப்பிடித்தல்.

2.4 குடியிருப்புகளில் வாழும் மக்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டல்.

## சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள்

### 01. சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் சுயசக்தி குடும்பங்களை பதிவு செய்வதற்கான தகவல்கள் பெற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டடு இதில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் தொடர்பாகவும் செயற்பாடுகள் தொடர்பாகவும் குடியிருப்புவாழ் மக்களை விழிப்புணர்வூட்டல்.

அதன் பிரகாரம் 2011ஆம் ஆண்டில் கொழும்பிலுள்ள நான்கு வலயங்களும் உள்ளடங்கும் விதத்தில் 81 குடியிருப்புகளைச் சேர்ந்த 16,378 பேர் விழிப்புணர்வு செய்யப்பட்டனர்.

## 02. சமூக அடிப்படை அமைப்புகளை வலுவூட்டல்



சுயசக்தி நிகழ்ச்சித்திட்டமானது குடியிருப்புகளில் வலுவான சமூக அடிப்படை அமைப்புகளை நிறுவி சமூக அடிப்படை அமைப்புகளைச் சார்ந்துள்ள குடியிருப்புகளில் சமூக அபிவிருத்தி குழுக்களை குடியிருப்புகளில் வலுவான நிறுவனக் கட்டமைப்பொன்றை நிறுவுதல். இதன்படி 2011ஆம் ஆண்டில் 61 சமூக மட்ட அமைப்புகளை இணைத்துக்கொண்டு இந்த சுயசக்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 03. மக்கள் சிறு குழுக்களாக ஒழுங்கமைத்தல்



நகரக் குடியிருப்புவாழ் மக்கள் மத்தியில் சென்று சிறு குழுக்களாக ஒன்றிணைந்து கூட்டுப் பலமாக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நகரக் குடியிருப்பு மக்களுக்கு விழிப்புணர்வூட்டல், அவர்கள் குழுவாக ஒன்றிணைய வழிகாட்டுதல், அதற்கு அவசியமான பணிகளை ஒழுங்கமைத்தல்.

## 04. சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்



நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகளின் அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யும் நோக்கத்துடன் சிறுவர் கழகங்களை நிறுவி குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்புகளில் நடைமுறைப்படுத்துவதற்காக சிறுவர்களுக்கான பல்வேறு போட்டிகள், அழகியல் கலை ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், மர நடுகை நிகழ்ச்சித்திட்டம், சேமிப்பு மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தல், சிறுவர் நூலகங்களை அமைத்து குடியிருப்புவாழ் பிள்ளைகளை அனைத்து வழிகளிலும் முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

அதன் பிரகாரம் 2001ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகளுக்காக 60 சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுயசக்தி சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 04 நகர வலயங்கள் உள்ளடங்கும் வகையில் 3977 சிறுவர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு சுயசகதி சிறுவர் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

## 05. கொஞ்சம் கொஞ்சமாக சேமிப்போம்



இந்த குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் நாட்டில் இயங்கி வரும் வங்கிக் கட்டமைப்புகளினின்று அன்னியப்பட்டுள்ளதால் இவர்களிடம் சேமிப்புப் பழக்கம் காணப்படவில்லை. எனவே, இதனால் அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் சிக்கல் தோன்றியுள்ளது. இந்நிலைமை கட்டாயமாக மாற்றியமைக்கப்பட வேண்டிய ஒன்றென்பதை நாம் கண்டறிந்துள்ளதால் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் கலந்தாலோசித்து பொருத்தமான வேலைத்திட்டமொன்றை

தயாரித்தல். இங்கு முதியோர் மற்றும் சிறுவர் சேமிப்பு வங்கித் தொழிலுடன் இணைக்கப்பட்டு அவர்களுக்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.

இலங்கை தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து சிறுவர் சேமிப்பு கணக்குகளை ஆரம்பித்தல், அதன் பிரகாரம் 2011ஆம் ஆண்டில் 1193 சிறுவர் சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 06. நகர கமத்தொழில் கருத்திட்டம்



நகரக் குடியிருப்புகளில் காணப்படும் சிறிய அளவிலான இடப்பரப்புகளை பயன்படுத்தி கமத்தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவு மற்றும் ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலம் அவர்களின் தினசரி செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்கும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கென வீடுகளில் நாளாந்தம் வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது.

மேல் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து கொழும்பு நகர வலயங்கள் நான்கும் உள்ளடங்கும் வகையில் முதலாவது கட்டத்தின் கீழ் 24 குடியிருப்புகளில் நகர கமத்தொழில் தொடர்பாக குடியிருப்பு மட்டத்தில் சிறுவர்களுக்கு விழிப்புணர்வு, குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு முதியோர் மற்றும் சிறுவர் கழகங்களின் சிறுவர்கள் போன்றவர்களை இணைத்துக்கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.

## 07. கழிவுப்பொருள் முகாமைத்துவம்



நகரச் சூழலில் பாரதுரமான பிரச்சனையாக காணப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் குடியிருப்புகளில் வசிப்போரின் பங்கேற்புடனும், உள்;ராட்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் இப்பிரச்சனைக்கு முறையானதும் நீண்டகாலமானதுமான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுன்னது.

அதன்படி, மேல்மாகாண திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் இணைந்து பிரதானமான 06 குடியிருப்புகளில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## 08. மது அற்ற நாடு



மஹிந்த சிந்தனைக்கமைய மது அற்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டுக்குத் தேவையான ஆரோக்கியமான பிரசைகளை உருவாக்குதல். நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றுவதால் குறிப்பாக நகரத்திலுள்ள குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகளை இந்நிலைமையிலிருந்து மீட்டெடுக்கத் தேவையான மது ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அரச நிறுவனங்களும் தன்னார்வ அமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுத்தல்.

விசேடமாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகாரசபையுடன் இணைந்து 2011ஆம் ஆண்டில் முக்கியமாக சமூக உயிர்ப்பூட்டல் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு கள மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை இணைத்துக்கொண்டு குடியிருப்புகளில் அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டு தேசிய சபை, கொழும்பு மாநகர சபை மற்றும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும் இணைந்து குடியிருப்பு மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். இதன் கீழ் 307 குடும்பங்கள் விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளன.

## 09. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்



நகரக் குடியிருப்புகளில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளை இனம்காணப்பட்ட துறைகளில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியின்பொருட்டு ஈடுபடுத்துதல் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். குடியிருப்புகளில் வாழும் மக்கள் பல்வேறு வாழ்க்கைத் தொழிற் பயிற்சிகளை பெறுவதன் மூலம் அவர்கள் பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக முன்னோக்கிச் செல்லும் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிரகாரம் 2011ஆம் ஆண்டு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து பிள்ளைகளின் ஆற்றல்கள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் குடியிருப்புகளைச் சேர்ந்த 48 பேருக்கு இலங்கை வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையில் பயிற்சி பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

## 10. சேமிப்பும் மற்றும் குறுங் கடன் நிகழ்ச்சித்திட்டம்



நகரக் குடியிருப்பு மட்டத்தில் தற்போது சிறிய அளவிலான சுயதொழில்களில் ஈடுபடும் பயனாளிகள் தொடர்பான அடிப்படை மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு நகர வலயங்கள் 04ம் உள்ளடங்கும் வகையில் 2116 பயனாளிகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதிலிருந்து 1086 குடும்பங்கள் தொடர்பான அடிப்படை சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பயனாளிகள் குறிப்பாக, குடியிருப்பு மட்டத்தில் உணவு உற்பத்தி, சிறிய தொழில் முயற்சிகள், பிற சேவைகள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்திகளை மேம்படுத்தத் தேவையான கடன் வசதிகளையும் முறையான பயிற்சியையும் வழங்குமாறு கோரியிருந்தனர்.

அதற்கமைய எமது அதிகாரசபை இடையீடு செய்து குறித்த பயனாளிகளை குழுக்களாக பிரித்து அவர்களை சேமிப்பின்பால் தூண்டி ஏற்கெனவே அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுய தொழில்களைப் பலப்படுத்தத் தேவையான அறிவு, அவர்களின் தொழில் முயற்சிகளை விருத்தி செய்யத் தேவையான கடன் வசதிகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் பெறப்பட்டன.

## உலக குடியிருப்பு தினம் அனுஷ்டிப்பு

- உலக குடியிருப்பு தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சட்ட ஏற்பாடுகளுக்கமைய உலக குடியிருப்பு தினத்தை இலங்கை அனுஷ்டித்தல் பற்றிய முக்கியமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

- அதன்படி அத்தினத்தையொட்டி நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் இடையீட்டுடன் "குடியிருப்புகளும் காலநிலை மாற்றங்களும்" எனும் கருப்பொருளில் கொழும்பிலுள்ள குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள நகரக் குடியிருப்புகளை இலக்காகக் கொண்டு திறந்தப் சித்திரப் போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டதோடு, இதில் 2589 சிறுவர்கள் பங்கேற்றனர்.

- இப்போட்டிக்கென தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு 03 வயதெல்லைகளின் கீழ் 02 சுற்றுப் போட்டிகளில் நடாத்தப்பட்டன. ஒக்ரோபர் மாதம் 03ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய விழாவின்போது 02 வயதெல்லைகளின் கீழ் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட 09 வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ் மற்றும் வெற்றிக் கேடயங்களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

- அதன்படி குறித்த குடியிருப்புகளில் வசிக்கும் பிள்ளைகளையும், முதியோரையும் இலக்காகக் கொண்டு உலக குடியிருப்பு தின கருப்பொருளினை நோக்கமாகக் கொண்டு குறு நாடகப் போட்டியொன்றை நடாத்த திட்டமிட்டதோடு, இதில் நகரக் குடியிருப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி 46 குறு நாடகங்கள் வழங்கப்பட்டன.

- இந்த குறு நாடகப் போட்டி இரண்டு சுற்றுக்களைக் கொண்டிருந்ததோடு, இறுதிச் சுற்றில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நாடகம் உலக குடியிருப்பு தின தேசிய நிகழ்வில் அரங்கேற்றப்பட்டது.







## 3. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம்

### 3.1 அனுராதபுரம் துருஇத்துறும் வீட்டுத் திட்டம்

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு இணையாக அனுராதபுரம் நகர எல்லையில் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனாத்தங்களால் பாதிக்கப்படும், சுருணர்வு மிக்க சூழல் அல்லது ஒதுக்கம் அல்லது நகர அபிவிருத்திப் பணிக்கென உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிக்கும் குறைந்த வருமானம் ஈட்டும் மக்களை இலக்காக் கொண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் அனுராதபுரம் மாநகர சபை, மத்திய நுவர கம்பலாத, கிழக்கு நுவர கம்பலாத பிரதேச செயலகம் மற்றும் தேசிய பௌதீகத் திட்டத்திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இக்கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.



வட மத்திய பிரதான நகர வலயங்களுக்கான திட்டத்தில் அனுராதபுரத்தின் வதிவிட வலயங்களாக கண்டறியப்பட்டுள்ள அனுராதபுரம், பெரிமியன்குளம் கட்டுகெலியா பிரதேசத்தில் 20 ஏக்கர், 03 றூட், 35 பேச் (ஹெக்ரயர் 8.4915) விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தை அந்த பிராந்தியத்தின் இயல்புகள் மற்றும் பசுமை இயல்புகளுக்கு நேரொத்த வகையில் நிலையான மனிதக் குடியிருப்பாக, உள் விதிக் கட்டமைப்புடன் கூடிய 108 வீடுகளை அமைப்பதற்கும், இப்பிரதான பணிக்கு மேலதிகமாக ஓட்டுமொத்த நிலப்பரப்பை 06 பசுமை வலயங்கள் மற்றும் மக்களின் வசதிகளுக்குத் தேவையான 03 எக்கர், 01 றூட், 06 பேச் (ஹெக்ரயர் 0.7329) விஸ்தீரணம் கொண்டதாக இக்குடியிருப்புத் திட்டத்தை அமைக்கவும் திட்டமிடப்பட்டது.



15 பேச் பரப்பில் 02 அறைகள், அமர்வறை, சமயலறை, குளியலறை, மலசலகூடம் அத்துடன் 600 சதுர அடி நிலப்பரப்பில் பாரம்பரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்க உத்தேசித்துள்ள 102 வீட்டுக் கூறுகள் மற்றும் சுற்றாடல், மின்சக்தி நேய தொழில்நுட்பத் (களிமண் தொழில்நுட்பம்) தைப் பயன்படுத்தி நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 06 வீட்டுக் கூறுகள் அடங்கலாக 108 வீட்டுக் கூறுகளைக் கொண்ட கட்டுகெலியாவ பசுமை வீட்டுத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2011ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டு கருத்திட்ட ஆகுசெலவு 74.5 மில்லியன் ரூபா ஆகும்.

# நிதி அறிக்கை

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

2011 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான

ஐந்தொகை

| 2010 | | குறிப்பு | கிரயம் | தேய்மானம் | தேறிய சொத்து |
|---|---|---|---|---|---|
| | **சொத்துக்கள்** | | | | |
| | **நிலையான சொத்துக்கள்** | | | | |
| 812,092.99 | மரத்தளபாடமும் பொருத்தியும் | 1 | 1,486,154.66 | 627,777.12 | 858,377.54 |
| 724,679.97 | அலுவலக உபகரணம் | 2 | 604,939.50 | 281,035.71 | 323,903.79 |
| - | கணனி | 3 | 1,646,758.60 | 992,318.02 | 654,440.58 |
| 1,536,772.96 | | | 3,737,852.76 | 1,901,130.85 | 1,836,721.91 |
| | **நிர்மாணங்களுக்கான முற்பணம்** | | | | |
| - | நிர்மாணங்களுக்கான முற்பணம் - 48 வத்த | | | 8,737,390.07 | |
| - | நிர்மாணங்களுக்கான முற்பணம் - அங்குலான | | | 84,943,761.22 | 93,681,151.29 |
| | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| 7,597,195.67 | நீல் | | | 13,103,674.00 | |
| 50,000.00 | முற்பணம் | 4 | | 98,860.00 | |
| | பெற்ற வட்டி | | | 147,474.00 | |
| | 7 நாள் வைப்பு | | 11,482,369.04 | | |
| 32,422,007.19 | காசு மற்றும் வங்கி மீதி | 5 | 39,619,234.06 | | |
| | சேமிப்பு கணக்கு | | 11,416,004.11 | 62,517,607.21 | 75,867,615.21 |
| **41,605,975.82** | | | | | **171,385,488.41** |
| | **உரிமையாண்மை,பொறுப்புக்கள்** | | | | |
| | உரிமையாண்மை மூலதனம் - 5000,000,000.00 | | | | |
| | திறைசேரி மூலதனம் | | | | |
| 3,388,468.92 | USIP வேலைத்திட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட சொத்துக்கள் | | | 1,694,234.46 | |
| 21,083,577.69 | மிகை/குறை வருமானம்/செலவுகள் | | | 142,121,394.79 | 143,815,629.25 |
| 24,472,046.61 | **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | | |
| 383,000.00 | பணிக்கொடை ஒதுக்கம் | 6 | | 3,759,834.00 | |
| | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| 191,722.40 | தக்க வைப்புப் பணம் | 7 | | 15,329,044.22 | |
| - 16,559,206.81 | திரண்ட செலவு | 8 | | 8,480,980.94 | |
| | | | | | 27,569,859.16 |
| **41,605,975.82** | | | | | **171,385,488.41** |

இறுதி நிதிக் கூற்றினை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும்.

| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தலைவர் |
|---|---|---|
| ந.கு.அ.அ | ந.கு.அ.அ | ந.கு.அ.அ |

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

2011 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான

வருமான செலவுக் கணக்கு

| 2010 | | அட்டவணை | | |
|---|---|---|---|---|
| 117,219,000.00 | வீடமைப்பு அமைச்சு | | 199,000,000.00 | |
| | திறைசேறி | | 139,619,000.00 | |
| 1,000,000.00 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 500,000.00 | |
| 1,795,200.00 | ஐ.நா.மனித.குடியிருப்பு வேலைத்திட்டம் | | 547,400.00 | |
| | வேறு வருமானம் | | 203,513.50 | |
| | ஸ்ரீவிக்ரமபுர | | 81,000.00 | |
| | வட்டி வருமானம் | | 147,474.00 | |
| | USIP பிற்போடப்பட்டது | | 1,694,234.46 | |
| 31,418,161.48 | வருமானம் (ந.அ.ச) | | - | |
| **151,432,361.48** | | | | **341,792,621.96** |
| 90,684,560.06 | அபிவிருத்திச் செலவு | அட்டவணை 01 | 172,911,270.68 | |
| 34,032,308.06 | நிர்வாகச் செலவுகள் | அட்டவணை 02 | 46,396,911.05 | |
| 439,261.04 | வேறு செலவுகள் | அட்டவணை 03 | 1,446,623.13 | |
| **125,156,129.16** | | | | **220,754,804.86** |
| 26,276,232.32 | குறை வருமான செலவுகள் | | | 121,037,817.10 |
| 5,192,654.63 | மீதி வருமான செலவுகள் | | | 21,083,577.69 |
| **21,083,577.69** | குறை வருமான செலவு | | | **142,121,394.79** |

இறுதி நிதிக் கூற்றினை தயாரிப்பதும் சமா்ப்பிப்பதும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும்.

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தலைவர் |
| ந.கு.அ.அ | ந.கு.அ.அ | ந.கு.அ.அ |

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை**

**2011 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான**

**நிதிப்பாய்ச்சல் கூற்று**

| | | |
|---|---|---|
| ஆண்டில் ஏற்பட்ட நிதிப்பாய்ச்சல் கூற்று | | 339,950,913.50 |
| | | |
| <u>நெறிப்படுத்தல் நடவடிக்கையின் பொருட்டு</u> | | |
| நிர்வாகச் செலவு | 47,859,864.83 | |
| பிற செலவுகள் | 1,300,490.65 | |
| நிர்மாணங்களுக்கான முற்பணம் | 93,780,011.29 | (142,940,366.77) |
| | | |
| <u>முதலீட்டு நடவடிக்கையின் பொருட்டு</u> | | |
| அபிவிருத்தி செலவு | 162,837,850.30 | |
| நிலையான சொத்துக்கள் | 1,798,647.08 | |
| ரீல் நிலுவை | 2,278,449.33 | (166,914,946.71) |
| | | 30,095,600.02 |
| காசு மற்றும் வங்கி மீதி | | 32,422,007.19 |
| 2011.12.31. திகதியில் காசு மற்றும் வங்கி மீதி | | **62,517,607.21** |

இந் நிதிப்பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இற்கமைய நேரடி முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிச்சட்டம் 14(2)C பிரிவிற்கமைய

கணக்காய்வுத் தலைமையதிபதி அறிக்கை

**විගණකාධිපති දෙපාර්තමේන්තුව**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனதுஇல<br>My No. | ටීඑච්/බී/යූඑස්ඩීඒ /<br>එෆ්ඒ / 2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2012 අගෝස්තු 31 දින |

සභාපති ,
නාගරික ජනාවාස සංවර්ධන අධිකාරිය

**නාගරික ජනාවාස සංවර්ධන අධිකාරියේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

සමාංක හා 2012 ජූලි 12 දිනැති මාගේ ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද යථෝක්ත වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්.සමරවීර
විගණකාධිපති

පිටපත් :- 01. ලේකම් - ඉදිකිරීම් , ඉංජිනේරු සේවා නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යාංශය
02. ලේකම් - මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

URBAN SETTLEMENT DEVELOPMENT AUTHORITY
646
06 SEP 2012
Chairman Office


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. ரீஎம்/பீ/யூஎஸ்டீஏ/எப்ஏ/2011
My No

මබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date
2012 யூலை 12

தலைவர்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

## - 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம்

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் அது பகுதியளவில் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் வரை அவ்வாறு மூலதனம் உருவாக்கப்படவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் - 03**

அதிகரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட கணனியும் துணைக் கருவிகளும் அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன்

அச்சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்வதற்காக 20 சதவீதம், ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் துணைக்கருவிகளை வேறாக இனங்கண்டு கணனி மற்றும் துணைக்கருவிகளுக்கு 50 சதவீதமும் மிகுதி அலுவலக உபகரணங்களுக்கு 20 சதவீதமும் ஆக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் அந்த பெறுமானத் தேய்வுக் கொள்கையின் மாற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 30**

தொடர்புபட்ட தரப்பினருடன் ரூபா 13,103,674 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரின் தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கலின் தன்மை தொடர்பாக மேற்கூறிய நியமத்தின் பிரகாரம் குறிப்புக்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல்

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 16(உ) உப பிரிவின் பிரகாரம் செலவு குறைந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பணம் வழங்குவதவற்காக ஆதனங்கள் அபிவிருத்தி செய்பவர்களின் சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் அனைத்து பணமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலவுவைக்கப்படல் வேண்டும். எனினும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இச் சேவைக் கட்டணத்தினை அறவிடுதல் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்த வருமான மார்க்கம் இழக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகாரசபை தொடர்ந்து நிலைத்திருத்தலானது திறைசேரியின் நிதி நிவாரணத்தின் அடிப்படையில் உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் மேலுள்ள அமைச்சரவை தீர்மானம் மற்றும் பொருத்தமானவகையில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(உ) பிரிவினைத் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஞ்ச் தனியார் கம்பனி கலைக்கப்பட்டு சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல்

2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமப/07/0140/226/013 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தோற்றுவிக்கப்பட்டவுடன் ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஞ்ச் (தனியார்) கம்பனி கலைக்கப்பட்டு அக்கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பதவியணியினரும் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் பதவியணியினரைச் சேர்த்துக்கொள்ளல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. மேலும் அப்பதவியணியினர் உள்வாங்கப்பட்ட திகதிக்கு முன்னைய காலம் தொடர்பான சம்பளம், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவுகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான கொடுப்பனவுகள், பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் என்பனவாக ரூபா 13,103,674 தொகை அதிகாரசபையினால் கம்பனி சார்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனியைக் கலைக்கும் போது இப்பணம் அறவிடப்படும் என தலைவர் தெரிவித்திருந்தார்.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

மக்கள் அடிப்படையிலான சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் ரூபா 3,741,000 பணம் அதிகாரசபையினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பணத்தினை மக்கள் அடிப்படையிலான சங்கங்களுக்கு செலுத்தப்படாது மிகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானத்துள்ளதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | ரூபா 22,898,373 கூட்டுமொத்தமான சேமிப்பு மற்றும் ஏழு நாட்கள் அழைப்பு |

| | |
|---|---|
| | வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய என்பீடீ 09 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பந்தி | ரூபா 398,665 தொகையான மோட்டார் வாகனத்தினைப் பழுதுபார்ப்பதற்காக போட்டி விலைகள் கோரப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வரிசை அமைச்சினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திற்கு பழுதுபார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்டி ருந்ததாகவும் அதிகாரசபையினால் அதற்காக கொடுப்பனவு செய்தல் மாத்திரம் இடம்பெற்றதாகவும் தலைவர் தெரிவித்துள்ளார். |
| (இ) 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளின் 8.13.4 ஆம் பிரிவு | கணியப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட அளவுகள் முடியுமான அளவு சரியானவை என உறுதிப்படுத்தப்பட்டு அப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட அளவினை மிகைப்பதற்காக 5% இற்கு மேல் இடமளிக்க முடியாது என்ற போதிலும் அவ்வாறு இடம்பெற் றிருக்கவில்லை. உதாரணமாக 48 தோட்ட செயற்திட்டம் |
| (ஈ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க கொள்வனவுச் செயற்பாட்டுக் கோவையின் 2.3(இ) பந்தி | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான காணியினை சுவீகரித்தல் மற்றும் மீளக் குடியமர்த்தல் நடவடிக்கை தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 48 தோட்ட செயற்திட்டத்திற்குரிய அச்சிக்கல்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய 26/2010 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | பொதுத்திறைசேரியின் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி தற்காலிக, அமைய, பதில் ஒப்பந்த அல்லது உதவி அடிப்படையிலான அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் அதனை கவனத்தில் எடுக்காது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக 13 பதவிகள் |

நிரப்பப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டு நிறுவனத்தினை பொருத்தமான வகையில் கட்டியெழுப்பும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது என தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 121,037,817 மிகையாக இருந்த அதேவேளை முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 26,276,232 தொகையுடன் ஒப்பிடுகையில் அதில் ரூபா 94,761,585 தொகையான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரியிடமிருந்தும் வரிசை அமைச்சிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு அதிகரித்தல் இந்த மிகையின் அதிகரிப்பிற்கு அதிகளவு தாக்கமளித்துள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 4.1 செயலாற்றல்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொறட்டுவை நகர சுற்றாடல் மற்றும் மனிதகுடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 384 வீடுகள் ரூபா 458.82 மில்லியன் செலவில் நிர்மாணித்தலும் அந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் 18% இனை ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கும் 2011 ஆம் ஆண்டிற்கான திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் முதற்கட்டமாக 144 வீடுகள் மாத்திரம் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயல்முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு 144 வீடுகளில் ஆண்டின் இறுதியில் பௌதீக இலக்கு 30% ஆக இருந்த போதிலும் அதில் 20% அளவிலேயே

பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதி மாதத்தில் பௌதீக செயலாற்றலில் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்காக நலன்பெறும் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து ரூபா 58.60 மில்லியனைப் பெற்றுக்கொள்வதற்குத் மதிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட அனுராதபுரம் 100 வீடுகள் செயற்திட்டத்தின் பௌதீக இலக்கிற்கும் செயல் முன்னேற்றத்திற்குமிடையே பின்வருமாறு முரண்கள் காணப்பட்டதனால் அச் செயலாற்றல் போதியளவில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

I. அனுராதபுரம் கட்டுக்கெலியாவ பிரதேசத்தில் ரூபா 74.5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 100 வீடுகள் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 1.46 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் அதிகாரசபையினாலேயே பல்வேறு ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் தேவையான மூலப்பொருட்கள் அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த கொள்வனவுகள் அல்லது ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக எதுவித முறைப்படியான கொள்வனவு நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

II. மேலும் இந்த வீட்டு நிர்மாணிப்புக்களுக்குரிய காணியின் உரிமை அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொரளை சஹஸ்புர மாடி வீட்டுச் செயற்திட்டமின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது மின்சார வசதிகள் வழங்கலின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 100% ஆக இருந்ததுடன் உள்ளபடியான செயல்முன்னேற்றம் 10% ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் அடிப்படையிலான 29 சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,094,976 தொகைப் பணம் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் நலன்பெறுனர்களிடம் ஒப்படைக்கப்படாது அச்சங்கங்களினால் வைத்துக்கொண்டிருந்தமை இனங்காணப்பட்டு அப்பணத்தினை மீண்டும் அதிகாரசபையினால் அறவிட்டுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 187 தோட்டங்களைப் புனரமைத்தல் செயற்திட்டம் தொடர்பான நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 52 பேச்சர்ஸ் காணிகளை பொறுப்பேற்பது தொடர்பாக எதுவித எழுத்துமூல உடன்படிக்கைகளும் இல்லாதிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அக்காணிகளை நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எத்திருக்கவில்லை. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வாய்மொழிமூல இணக்கப்பாட்டின் பேரில் மாத்திரம் வீடமைப்பு உத்தேச திட்டத்தினை நிர்மாணப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் இனங்காணப்பட்ட 46 குடும்பங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு அதற்கிணங்க ரூபா 4.6 மில்லியன் குடியிருப்பாளர்கள் 46 பேருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய காலத்திற்குள் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களைச் செலுத்தாதன் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 53,561 தொகை மிகைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் 2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ரீல் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக ரூபா 13,200,000 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அதிகாரசபையின் செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,147,825 தொகையில் ரீல் நிறுவனத்தினால் செலுத்தப்படாதிருந்த ஊழியர் சேமலாப

நிதியத்திற்கான நிலுவைப் பணத்தினைச் செலுத்துவதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரீல் கம்பனியின் அனைத்து ஊழியர்களும் அதிகாரசபைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதனால் செலுத்தப்படாதிருந்த அந்த நிலுவைப் பணத்தினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

## 4.4 ஆளணி நிர்வாகம்

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 79 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 69 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பின் பிரகாரம் அதிகாரசபையின் வெற்றிடமான பதவிகள் 23 ஆகவும் மிகையான பதவிகள் 13 ஆகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 5. கணக்களிதன்மையும் நல் ஆளுகையும்

## 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பாக காட்டப்பட்டிருந்த பிரதான செயற்பாடுகளுக்குச் சமமற்ற வகையில் ஏனைய தலைப்புக்களின் கீழ் செயல்முன்னேற்ற அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்ததனால் அவை உரிய இலக்கினை அடைந்துள்ளனவா என்பதனை சரியாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்து உதாரணம் :- 48 தோட்டங்கள் செயற்திட்டம்.

(ஆ) அனுராதபுரம் கட்டுக்கெலியாவ பெரியன்குளத்தில் 100 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் பொரளை சஹஸ்புர மற்றும் சிங்கபுர மாடி வீடுகளைத் திருத்தம் செய்தல் ஆகிய இரண்டு செயற்திட்டங்களை ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தும் அச் செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மூலதனத்தினைப் பயன்படுத்தல்

(ஆ) கணக்கீடு

(இ) அபிவிருத்திச் செலவுகளின் முகாமைத்துவம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) செயற்திட்டங்களின் மதிப்பீடுகளைத் தயாரித்தல்

எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Nr/Sd*